## தினகரன் (27.05.2025)

காகித ஆலை சார்பில்

# தினசரி நடமாடும் மருத்துவ முகாம்

## 896 பேருக்கு சிகிச்சை



தமிழ்நாடு காகித ஆலை சார்பில் நடைபெறும் நடமாடும் மருத்துவ முகாம்.

வேலாயுதம்பாளையம், மே 27: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் நடைபெறும் தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் மூலம் 896 நபருக்கு மருத்துவ சிகிச்சையளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் உடல்நலனை பேணுவதற்காக தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் நடைபெறுகிறது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், முனைவர்.சந்தீப் சக்சேனா கடந்த 21.02.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டதையடுத்து இந்த மருத்துவ முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதன்படி இம்முகாமானது பொது மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்வதற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், காகிதபுரம் மற்றும் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, கோயமுத்தூர் உடன் இணைந்து காகித ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி. வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சிகளில் உள்ள 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் 21.02.2025 முதல் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் வரை (24.05.2025) 50-கிராமமான பொன்னியாக்கவுண்டன் புதூருடன் மூன்றாம் மாத மருத்துவ முகாமானது நிறைவு பெற்றது. மேற்கண்ட மருத்துவ முகாமில் 896 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்திரைகளும் காகித நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை சுமார் 2983 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்,

இந்த மருத்துவ முகாம்களை காகித நிறுவனம் தொடர்ந்து நடத்தி வருகிறது.

**தினமணி (27.05.2025)**

# பொன்னியாக்கவுண்டன் புதூரில் நடமாடும் மருத்துவ பரிசோதனை முகாம்

கரூர், மே 26: புகழூர் டிஎன்பிஎல் ஆலை சார்பில் பொன்னியாக்கவுண்டன் புதூரில் திங்கள்கிழமை நடமாடும் மருத்துவ முகாம் நடைபெற்றது.

கரூர் மாவட்டம் புகழூர் காகித ஆலையின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் உடல்நலனை பேணுவதற்காக தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாமை கடந்த பிப்.21-ஆம்தேதி தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் சந்தீப் சக்சேனா தொடங்கி வைத்தார். காகித ஆலை மற்றும் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பில் காகித ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் நாள்தோறும் நடைபெற்ற இம்முகாமின் நிறைவு நாளில் 50-ஆவது கிராமமான பொன்னியாக்கவுண்டன்புதூரில் திங்கள்கிழமை நடைபெற்றது.

முகாமில் மருத்துவ குழுவினர் பொதுமக்கள் 896 பேருக்கு மருத்துவ பரிசோதனை செய்து, ஆலோசனைகளையும், தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்திரைகளையும் வழங்கினர். முகாம் குறித்து ஆலை அதிகாரிகள் கூறுகையில், இலவச மருத்துவ முகாம்கள் மூலம் 2,983பேர் பயனடைந்துள்ளனர் என்றனர்.

## தினத்தந்தி (27.05.2025)



# நடமாடும் மருத்துவ முகாம்

நொய்யல், மே.27-

புகழூர் காகித ஆலை சார்பில் கடந்த பிப்ரவரி மாதம் 21-ந்தேதி முதல் புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம் கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்று வந்தது. கடைசி நாளான நேற்று 50-வது கிராம மான பொன்னியாக்கவுண்டன்புதூரில் மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமில் 896 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்தி ரைகளும் காகித நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப் பட்டுள்ளது. இந்த மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை மொத்தம் சுமார் 2,983 பொதுமக்கள் மருத்துவ பயனடைந் துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மாலை மலர் 28.05.2025**




பொன்னியா கவுண்டன் புதூரில் மருத்துவ முகாம் நடைபெற்ற போது எடுத்த படம்.

### புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின்

# இலவச மருத்துவ முகாம் மூலம் 2983 பேருக்கு மருத்துவ உதவி

வேலாயுதம் பாளையம், மே.27—

கரூர் மாவட்டம் புகளூர் காகி தபுரம் தமிழ்நாடு செய் தித்தாள் காகித நிறுவனத் தின் சமுதாய நலப்ப ணித் திட்டத்தின் கீழ் தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

முகாமை தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சந்தீப் சக்சேனா கடந்த பிப்ரவரி மாதம் 21—ந் தேதி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கோவை ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ மனை உடன் இணைந்து மருத்துவ முகாம்கள் நடை பெற்று வருகிறது.

நேற்று 50—வது கிராம மான பொன்னியாக் கவுண் டன் புதூருடன் 3—வது மாத மருத்துவ முகாம் நிறைவு பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் 896 பொதுமக்க ளுக்கு மருத்துவ ஆலோச னை களும், தேவைப்பட்டோ ருக்கு மருந்து மாத்திரைகளும் இலவசமாக வழங்கப்பட்டுள் ளது.

இதுவரை மொத்தம் சுமார் 2983 பொதுமக்கள் மருத்துவ பயனடைந்துள்ள னர் என்பது குறிப்பிடத்தக் கது.

இந்த மருத்துவ முகாம் களை காகித நிறுவனம் தொடர்ந்து நடத்தி வருகிறது.

**தினமலர் (29.05.2025)**

# நடமாடும் இலவச மருத்துவ முகாம்

**வேலாயுதம்பாளையம்:** தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தனது சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் உடல் நலனை பேணுவதற்காக தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாமை நடத்தி வருகிறது.

முகாமை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன மேலாண்மை இயக்குனர் சந்தீப் சக்சேனா கடந்த பிப்ரவரி 21ம் தேதி தொடங்கி வைத்தார். தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கோவை ராயல் கேர் மருத்துவமனை சார்பில் காகித ஆலையைச் சுற்றியுள்ள 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதன்படி 50வது கிராமமான பொன்னியாக்கவுண்டன்புதூரில் மூன்றாம் மாத மருத்துவ முகாம் நிறைவு பெற்றது. முகாமில் 896 பேருக்கு மருத்துவ ஆலோசனை, தேவைப்பட்டோருக்கு மருந்து, மாத்திரைகள் காகித நிறுவனம் மூலம் இலவசமாக வழங்கப்பட்டது. மேற்கண்ட மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை 2 ஆயிரத்து 983 பேர் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**காலைக்கதிர் (29.05.2025)**

# புகழூரில் மருத்துவ முகாம் பயனடைந்த 2,983 பேர்

**கரூர், மே 29**

புகழூர் டி.என்.பி.எல்., சார்பில் நடந்த நடமாடும் மருத்துவ முகாமில், 2,983 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.



புகழூர், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணி திட்டத்தின் கீழ், பொதுமக்களின் உடல் நலனை பேணுவதற்காக, தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

இதில், 50வது கிராமமான பொன்னியாக் கவுண்டன்புதுாரில், மூன்றாம் மாத மருத்துவ முகாமானது நிறைவு பெற்றது. இங்கு, 896 பேருக்கு மருத்துவ ஆலோசனை, தேவைப்பட்டோருக்கு மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை நடமாடும் மருத்துவ முகாமில், 2,983 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.